

கிருஷ்ணகிரி மாவட்ட இளைஞரணி பேச்சுப் போட்டி மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது. தாயகம் கவி எம்.எல்.ஏ., பிரகாஷ் எம்.பி., மருத்துவர் எழிலன் எம்.எல்.ஏ., யாழினி, சௌமியன், ஈரோடு இறைவன், சூர்யா, கிருஷ்ணமூர்த்தி, தினேஷ் ராஜன் உள்ளிட்டோர் உடனுள்ளனர்.

# மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் தலைமை!

## கிருஷ்ணகிரி மாவட்ட இளைஞரணி பேச்சுப் போட்டி!

*கிருஷ்ணகிரி, ஆக. 27 -*

கிருஷ்ணகிரியில்மாவட்ட இளைஞரணி சார்பில் 'என் உயிரினும் மேலான....!'

கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி கிழக்கு மாவட்ட செயலாளர் தே. மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது முன்னாள் மாவட்ட கழக செயலாளர் இ.ஜி.சுகவனம் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

கிருஷ்ணகிரி மாவட்ட தி.மு.க. இளைஞரணி சார்பில் என் உயிரினும் மேலான கலைஞர் நூற்றாண்டு பேச்சுப் போட்டி கல்லூரி மாணவ மாணவியருக்கு கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே உள்ள ஆர்.கே.வி. ரெசிடென்சியில் நடைபெற்றது. கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான தே.மதியழகன் தலைமை வகித்தார்.

மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் வரவேற்புரை ஆற்றினார். இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மகேந்திரன், சத்தியமூர்த்தி, சங்கர் , லயோலா ராஜசேகர், சங்கர், சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர் .

மேலிட பார்வையாளராக மாநில இளைஞரணி துணை செயலாளர் பிரகாஷ் எம்.பி பங்கேற்றார் கழக அமைப்பு துணை செயலாளர் தாயகம் கவி எம்எல்ஏ , மருத்துவர். எழிலன் எம்.எல்.ஏ., மருத்துவர் யாழினி, சௌமியன், ஈரோடு இறைவன் , சூர்யா கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் நடுவராக பணியாற்றினார்.

இதில் ஏராளமான கல்லூரி மாணவ மாணவியர் பேச்சுப் போட்டியல் கலந்து கொண்டனர் இறுதியில் 12 மாணவ மாணவியர் மண்டல அளவில் போட்டியில் பங்கு பெற தேர்வு செய்யப்பட்டனர் அவர்களுக்கு சான்றிதழ் கேடயம் தலா ரூ 10,000 வீதம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டது போட்டியில் பங்கேற்ற அனைவருக்கும் 1000 ரூபாய் பரிசாக வழங்கி சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஜி.சுகவனம், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் அஸ்லாம்,

நகரக் கழக செயலாளர் நவாப் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

---

### பெரம்பலூர் மாவட்டத்தில்

# விவசாயிகளுக்கு வெங்காயம் சார்ந்த தொழில் மையம் அமைக்க வேண்டும்!

## ஒன்றிய அமைச்சரிடம் பெரம்பலூர் எம்.பி. அருண் நேரு வலியுறுத்தல்!

*திருச்சி, ஆக. 27-*

பெரம்பலூர் பாராளுமன்ற தொகுதி உறுப்பினர் அருண் நேரு ஒன்றிய உணவு பதப்படுத்தல் துறை அமைச்சர் சிராஜ் பஸ் வானிடம் பெரம்பலூர் மாவட்ட விவசாயி களின் நலனை முன்னிட்டு வெங்காயம் சார்ந்த தொழில் மையம் அமைக்க வேண்டும் என்று மனு கொடுத்து வலியுறுத்தினார்.

தமிழகத்தில் கிரா மப்புறங்கள் அதிகம் உள்ள பெரம்பலூர் மாவட்டத்தில் விவசாயிகள் அதிக அளவில் வசிக்கின்றனர் மனித மேம்பாட்டு அறிக்கை 2017 ன் படி தனிநபர் வருவாய் அடிப்படையில் வாழ்க்கை தரத்தில் 31 வது மாவட்டமாக பெரம்பலூர் உள்ளது இங்கு 1,0 2,843 ஹெக்டேர் அளவுக்கு சாகுபடி பரப்பு உள்ளது .சோளம், வெங்காயம் ,நெல், மஞ்சள், மிளகாய், தக்காளி, கத்தரிக்காய், எலுமிச்சை, நிலக்கடலை, சூரியகாந்தி மற்றும் எள் ஆகியவற்றை ஆகியவை சாகுபடி செய்யப்படுகிறது இங்குள்ள பருவநிலை மண்ணின் தன்மை ஆகியவை சிறிய வெங்காய சாகுபடிக்கு ஏற்றதாக அமைந்துள்ளது இதனால் தரமான சிறிய வெங்காயம் அதிக அளவில் உற்பத்தி செய்ய முடிகிறது மேலும் இந்த மண்டலத்தின் 2,200 கோடி மதிப்பிலான சிறிய வெங்காயம் உற்பத்தி செய்யும் அளவுக்கு சந்தை வாய்ப்பு பெரிதாக உள்ளது சிறிய வெங்காயம் உற்பத்தி செய்யும் சாகுபடியாளர்கள் போதிய கிடங்கு வசதி மற்றும் உட்கட்டமைப்பு வசதி இல்லாததால் பெரும் சிரமங்களை சந்தித்து வருகிறார்கள்.



பெரம்பலூர் நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் அருண் நேரு ஒன்றிய உணவு பதப்படுத்துதல் துறை அமைச்சர் சிராஜ் பஸ் வானிடம் பெரம்பலூர் மாவட்ட விவசாயிகளின் நலனை முன்னிட்டு வெங்காயம் சார்ந்த தொழில் மையம் அமைக்க வேண்டும் என்று மனு கொடுத்து வலியுறுத்தினார்.

தமிழகத்தில் அதிக அளவில் சாகுபடி செய்யப்படும் மாவட்டமாக பெரம்பலூர் இருக்கிறது இருந்தா லும் விவசாய நில அறுவடைக்கு பின் பெரும் இழப்பை சந்தித்து வருகிறார்கள் பதப்படுத்துதல் மற்றும் உணவுப் பொருட்களை பாதுகாத்து வைக்க போதிய இட வசதியின்மையால் 16 சதவீத முதல் 35 சதவீதம் வரை உற்பத்தியில் பெரும் இழப்பை சந்தித்து வருகின்றனர்

போதிய பாதுகாப்பு வசதி இல்லாததால், உற்பத்தி செய்த விவசாய பொருட்களை இடைத்தரகர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு மிகக் குறைந்த விலைக்கு விற்க வேண்டிய பரிதாப நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர் இதனால் இவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது இவற்றுக்கு தீர்வு காண பெரம்பலூர் மாவட்டத்தில் வெங்காயம் சார்ந்த தொழில் மையம் அமைக்க வேண்டும் இந்த மையத்தில் சிறிய வெங்காயம் சோளம் போன்றவற்றை பதப்படுத்த முக்கியத்துவம் தரப்பட வேண்டும் இதனால் அறுவடைக்கு பின் ஏற்படக்கூடிய இழப்பு குறையும் உற்பத்தி பொருளுக்கும் நியாயமான விடை கிடைக்கும் விவசாயி களுக்கான வாழ்வாதாரமும் பெருகும் கிடங்கு வசதியால் உற்பத்தி செய்த பொருட்களின் தரம் மேம்படும் அறுவடைக்கு பின் ஏற்ப டக்கூடிய இழப்பு குறைவதால் விவசாயிகளின் லாபம் அதிகரிக்கும் சமூக பொருளாதாரத்தின் நிலை மேம்படும் வேலை வாய்ப்பு அதிகரிக்கும் சாலை குடிநீர் வினியோகம் மற்றும் மின் வசதியை உறுதி செய்வதன் மூலம் அடிப்படை வசதிகள் விவசாயிகளுக்கு கிடைக்கும். அதனால் பெரம்பலூர் மாவட்டத்தில் சிறிய வெங்காயம், சோளம் அதிகளவில் உற்பத்தி செய்யப்படுவதை கருத்தில் கொண்டு வெங்காயம் சார்ந்த தொழில் மையம் அமைப்பதன் மூலம் ஒட்டு மொத்த பெரம்பலூர் மாவட்டத்தின் பொருளாதாரம் மேம்படும் இதற்கு போதிய ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று அவர் கொடுத்துள்ள மனுவில் தெரிவித்துள்ளார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### கற்கோவில் இரா. இராமதாசு
### ஆகஸ்ட் 27 (2017)



இளமை காலம் தொட்டே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு நீடாமங்கலம் பகுதியில் கழகம் வளர பாடுபட்டவர்.

நீடாமங்கலம் ஒன்றியக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டம் – விலைவாசி எதிர்ப்புப் போராட்டம் – சட்ட எதிர்ப்புப் போராட்டம் – இலங்கை தமிழர் ஆதரவுப் போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

# ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர - பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயல்வீரர்கள் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் சு.முத்துசாமி அறிவிப்பு!



ஈரோடு தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர பகுதி, ஒன்றிய, பேரூர் கழக செயல்வீரர்கள் கூட்டம் கீழ்க்கண்ட நிகழ்ச்சி நிரல்படி நடைபெறவுள்ளது. கூட்டத்திற்கான ஏற்பாடுகளை சம்பந்தப்பட்ட கழக நிர்வாகிகள் செய்து, மாநில, மாவட்ட நிர்வாகிகளுக்கும் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் மற்றும் அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள் அனைவருக்கும் அழைப்பு கொடுத்து கழக அரசின் சாதனை விளக்க தெருமுனை கூட்டங்கள் நடத்துதல், அனைத்து இடங்களிலும் கழக கொடியேற்றுதல் மற்றும் கழக ஆக்கப்பணிகள் குறித்து விவாதித்து செயல்படுத்த கூட்டத்தை சிறப்பாக நடத்திட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

| தேதி | நேரம் | ஒன்றியம்/பகுதி | இடம் |
|---|---|---|---|
| 25.08.2024 ஞாயிறு | காலை 10 மணி | சென்னிமலை வடக்கு ஒன்றியம் | சதா மஹால், வெள்ளோடு. |
| 25.08.2024 ஞாயிறு | மாலை 4 மணி | பெருந்துறை கிழக்கு ஒன்றியம் | தங்கம் மஹால், காஞ்சிக்கோவில். |
| 29.08.2024 வியாழன் | காலை 10 மணி | கொடுமுடி மேற்கு ஒன்றியம் | மகாமாரியம்மன் மண்டபம், சிவகிரி. |
| 29.08.2024 வியாழன் | மாலை 4 மணி | மொடக்குறிச்சி கிழக்கு ஒன்றியம் | கிருஷ்ணா மஹால், மொடக்குறிச்சி |
| 31.08.2024 சனி | காலை 10 மணி | ஊத்துக்குளி மத்தியம் ஒன்றியம் | திருமுருகன் திருமண மண்டபம், தாளப்பதி. |
| 01.09.2024 ஞாயிறு | காலை 10 மணி | மொடக்குறிச்சி மேற்கு ஒன்றியம் | ராசம்மாள் திருமண மண்டபம், அவல்பூந்துறை |
| 01.09.2024 ஞாயிறு | மதியம் 12 மணி | அவல்பூந்துறை பேரூர் | ராசம்மாள் திருமண மண்டபம், அவல்பூந்துறை |
| 01.09.2024 ஞாயிறு | மாலை 3 மணி | மொடக்குறிச்சி தெற்கு ஒன்றியம் | சிவசக்தி திருமண மண்டபம், அரச்சலூர். |
| 01.09.2024 ஞாயிறு | மாலை 6 மணி | கொடுமுடி வடக்கு ஒன்றியம் | ராம்மஹால், கொடுமுடி. |
| 02.09.2024 திங்கள் | காலை 10 மணி | ஈரோடு ஒன்றியம். | KC திருமண மண்டபம், சித்தோடு. |
| 02.09.2024 திங்கள் | மாலை 3 மணி | காஞ்சிக்கோவில் பேரூர். | காஞ்சிக்கோவில் |
| 02.09.2024 திங்கள் | மாலை 6 மணி | பள்ளபாளையம் பேரூர். | பள்ளபாளையம் |
| 03.09.2024 செவ்வாய் | காலை 10 மணி | பெருந்துறை தெற்கு ஒன்றியம் | ஆர்த்தி திருமண மண்டபம், விஜயமங்களம் |
| 03.09.2024 செவ்வாய் | மாலை 4 மணி | பெருந்துறை வடக்கு ஒன்றியம் | மயில் மஹால்,திங்களூர் |
| 04.09.2024 புதன் | காலை 9 மணி | பெத்தாம்பாளையம் பேரூர் | கழக அலுவலகம், பெத்தாம்பாளையம், |
| 04.09.2024 புதன் | காலை 11.30 மணி | நல்லாம்பட்டி பேரூர் | கழக அலுவலகம் நல்லாம்பட்டி |
| 06.09.2024 வெள்ளி | காலை 9 மணி | கொல்லன்கோவில் பேரூர் | MPS திருமண மண்டபம், தாண்டம்பாளையம். |
| 06.09.2024 வெள்ளி | காலை 11.30 மணி | சிவகிரி பேரூர் | கொங்கு திருமண மண்டபம், சிவகிரி |
| 06.09.2024 வெள்ளி | மாலை 3 மணி | அரச்சலூர் பேரூர் | அரச்சலூர் |
| 06.09.2024 வெள்ளி | மாலை 5 மணி | வடுகபட்டி பேரூர் | வடுகப்பட்டி |
| 07.09.2024 சனி | காலை 9.30 மணி | கொடுமுடி பேரூர் | ஒன்றிய தி.மு.க அலுவலகம் |
| 07.09.2024 சனி | காலை 11 மணி | சென்ன சமுத்திரம் பேரூர் | ஒன்றிய தி.மு.க அலுவலகம் |
| 07.09.2024 சனி | மாலை 3 மணி | வெங்கம்பூர் பேரூர் | ஒன்றிய தி.மு.க அலுவலகம் |
| 07.09.2024 சனி | மாலை 5 மணி | ஊஞ்சலூர் பேரூர் | ஒன்றிய தி.மு.க அலுவலகம் |
| 8.09.2024 ஞாயிறு | காலை 9 மணி | ஊத்துக்குளி தெற்கு ஒன்றியம் | தாத்தையன் கோவில் மண்டபம், கவுண்டம் பாளையம், ஊத்துக்குளி. |
| 8.09.2024 ஞாயிறு | காலை 9.30 மணி | K.S.பாளையம் பேரூர் | அன்னலட்சுமி திருமண மண்டபம், பெத்தாம்பாளையம். |
| 8.09.2024 ஞாயிறு | காலை 11 மணி | ஊத்துக்குளி பேரூர் | தாத்தையன் கோவில் மண்டபம், கவுண்டம் பாளையம், ஊத்துக்குளி |
| 8.09.2024 ஞாயிறு | காலை 11.30 மணி | பெருந்துறை பேரூர் | செந்தூர் மஹால், சென்னிமலை ரோடு, பெருந்துறை. |
| 8.09.2024 ஞாயிறு | காலை 11.30 மணி | ஊத்துக்குளி வடக்கு ஒன்றியம் | பகவதி அம்மன் திருமண மண்டபம், குன்னத்தூர் |
| 8.09.2024 ஞாயிறு | பகல் 1 மணி | குன்னத்தூர் பேரூர் | பகவதி அம்மன் திருமண மண்டபம், குன்னத்தூர் |
| 8.09.2024 ஞாயிறு | மாலை 3 மணி | சித்தோடு பேரூர் | விஜி ஹோட்டல் அரங்கம், சித்தோடு நால்ரோடு. |
| 8.09.2024 ஞாயிறு | மாலை 3.30 மணி | சூரியம்பாளையம் பகுதி | பிளாட்டினம் மஹால், ஈரோடு. |
| 8.09.2024 ஞாயிறு | மாலை 5 மணி | நசியனூர் பேரூர் | சுகம் உணவக அரங்கம், பள்ளபாளையம், வாய்க்கால்மேடு. |
| 8.09.2024 ஞாயிறு | மாலை 5.30 மணி | வீரப்பன்சத்திரம்பகுதி | தேவிமஹால், பவானி மெயின் ரோடு, ஈரோடு. |
| 09.09.2024 திங்கள் | காலை 9 மணி | பெரியசேமூர் பகுதி | வார்டு 9வது கவுன்சிலர் ஜெகநாதன் குடோன் |
| 09.09.2024 திங்கள் | காலை 9.30 மணி | பாசூர் பேரூர் | பேரூர் தி.மு.க அலுவலகம், பாசூர் |
| 09.09.2024 திங்கள் | காலை 11 மணி | கோட்டைப் பகுதி | நகராட்சி திருமண மண்டபம், பஸ் ஸ்டாண்டு அருகில் |
| 09.09.2024 திங்கள் | காலை 11.30 மணி | கிளாம்பாடி பேரூர் | பேரூர் தி.மு.க அலுவலகம், கிளாம்பாடி |
| 09.09.2024 திங்கள் | மாலை 3 மணி | சூரம்பட்டி பகுதி | லட்சுமி துரைசாமி மண்டபம், வில்லரசம்பட்டி. |
| 09.09.2024 திங்கள் | மாலை 3.30 மணி | வெள்ளோட்டம்பரப்பு பேரூர் | நடுப்பாளையம் |
| 09.09.2024 திங்கள் | மாலை 5 மணி | பெரியார் நகர் பகுதி | மாவட்ட அலுவலகம், மணல்மேடு. |
| 09.09.2024 திங்கள் | மாலை 5.30 மணி | மொடக்குறிச்சி பேரூர் | கரியகாளியம்மன் திருமண மண்டபம் |
| 10.09.2024 செவ்வாய் | மாலை 3 மணி | கொல்லம்பாளையம் பகுதி | மாவட்ட அலுவலகம், மணல்மேடு. |
| 10.09.2024 செவ்வாய் | மாலை 5.30 மணி | கருங்கல்பாளையம் பகுதி | குறிஞ்சி கலையரங்கம் VVCR நகர். |

**அமைச்சர் சு.முத்துசாமி**
செயலாளர் - ஈரோடு தெற்கு மாவட்ட தி.மு.க.